# வைரமுத்துவின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

*முனைவர் டே. ரமணி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
போப் கல்லூரி, சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7892

**ஆய்வுச்சுருக்கம்**

*சமுதாயத்தின் பல்வேறு நிலைகளையும் அச்சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் திறம்பட எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்கள் கவிஞர்கள். மேலும் தனிமனிதனின் உணர்வுகளையும் போராட்டங்களையும் துன்பங்களையும் திறம்பட எடுத்துரைக்கின்றனர். வைரமுத்துவின் சமுதாயச் சிந்தனைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

தற்கால இலக்கியங்கள் சுருக்கமாகவும் சுவையாகவும் அழகு நடையோடும் இருப்பதால் தனித்துவம் பெறுகிறது. இலக்கண மரபுகளை உடைத்து உள்ளத்து உணர்ச்சிகளை உள்ளபடியே பதிவு செய்யும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன. தற்கால இலக்கியங்கள் இலக்கண வரையறையின்றி புதுக்கவிதை என்றும் வழங்கப்படுகிறது. பாரதியார் புதுக்கவிதைக்கு இலக்கணம் கூறுகையில சுவை புதிது, சொல் புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சோதி மிக்க நவ கவிதை, எந்நாளும் அழியா மாகவிதை என்கிறார். சமுதாயத்தில் காணப்படும் பிரச்சனைகள் அனைத்தையும் கருப்பொருளாக்கி பாடுவதிலே வல்லமை பெற்றவராக விளங்கும் கவிஞர் வைரமுத்துவின் சமுதாயச் சிந்தனைகளை ஆராயும் போக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சமூகம்**

இன்றைய சமூகம் செயற்கையாய் சிரித்து வாழ்க்கை நடத்துகின்ற சமூகமாக காணப்படுகிறது. பொதுநலம் குறுகி தன்னலம் பெருகி விட்டது.அவசர உலகின் அதிவேக பயணம் நம்மை இவ்வாறு மாற்றி விட்டது என்றே கூறலாம். இயற்கையாய் கிடைத்த மகிழ்ச்சியான வாழ்வு இன்று இல்லாமல் போனது. இதைக் கவிஞர் வைரமுத்து

**“அந்தி வெயிலில் விழும் நிழலைப்போல**
**சுயநலம் நீண்டு கொண்டே போகிறது**
**மனிதன் தன் சொந்தச் செலவுக்கு மட்டுமே**
**கண்ணீரைச் சேமித்து வைக்கிறான்**
**பொதுநலம் இறந்து கொண்டிருக்கும் சமூகப்போக்கில்**
**போராட்டம் இல்லாமல் எதுவுமே கிடைப்பதில்லை”**

என்று கூறுவதிலிருந்து இன்றைய மக்களின் நடைமுறை வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

## மனிதநேயம்

அன்பும் அறமும் பின்னிப் பிணைந்த ஒன்றே மனிதநேயமாகும். ஒரு உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நேரத்தில் அவ்வுயிரைக் காத்துப் பாதுகாக்கின்ற நிகழ்வுகள் நம் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளாக அமையும். அஃறிணைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதைத் தம் கவிதை வாயிலாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

**“என் வீட்டைத் தடவிக் கொண்டோடும்**
**காலங் கடந்த நதியே**
**நீ சொல் உன்**
**மாறாத ஓட்டத்தில்**
**உன்னால் மறக்க முடியாத**
**நிகழ்ச்சி எது?**
**நுரைசிரிப்போடு நதி சொன்னது:**
**முண்டும் முடிச்சுமான**
**மரக்கட்டை ஒன்றில்**
**ஒரு குழந்தையைக் காப்பாற்றிக்**
**கரை சேர்த்தது’**

என்ற கவிதை மனிதநேயத்தின் முத்தாய்ப்பாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

## சாதி

அறிவியலின் அசுர வளர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், மனித வாழ்வு மேம்பட்டுக் கொண்டே சென்றாலும், அறிவை ஆகாயம் வரைக்கும் கொண்டு சென்றாலும், மனிதர்கள் பலர் சாதிகளைப் பகுத்து சண்டைகளைத் தூண்டி விடுதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். சாதி வெறியைத் தூண்டும் மனிதனின் சிறுமைக்குணம் இன்னும் மாறவில்லை.

**“எங்கே ஊர்களில் ஜாதி இல்லையோ**
**அங்கே கூவுக சேவல்களே!**
**எங்கே மனிதரில் பேதம் இல்லையோ**
**அங்கே முழங்கு சங்கினமே’**

என்று கூறும் வரிகளில் அஃறிணை களாகிய சேவல் கூவும்' ஒலியும், சங்கு முழங்கு ஒலியும் கேட்கப்பட வேண்டிய இடங்கள் சாதி இல்லா இடங்களே என்று குறிப்பிடுகிறார்.

## குழந்தைத் தொழிலாளர்

“இளமையில் கல்” என்பது பழமொழி. கல்வி கற்க வேண்டிய வயதில் பாட சாலைக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்லும் மாணவர்களின் அவலநிலையைக் கூறுகையில்

**“அங்கங்கே தேசமெங்கும்**
**இரும்படிக்கும் ரோஜாக்களை**
**பொதி சுமக்கும் பூக்களை**
**தாய்பாலுக்குச் சம்பளம் கட்டச்**
**சம்பாதிக்கும் சிசுக்களை**
**கூப்பிடுங்கள் நேருஜி”**

என்கிறார். குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டிய வயதில் கண்டிப்பாக கற்க வேண்டும் என்ற ஏக்கத்தை இவ்வரிகளில் காணமுடிகிறது.

## முடிவுரை

கவிஞர்கள் அனைவரும் இன்றைய மக்களின் மனதில் நீங்கா இடத்தை பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணம் அவர்கள் சமுதாயப் பிரச்சினைகளை தங்கள் கவிதைகளில் எடுத்துக் கூறுவதால் மட்டுமே. இதன் மூலம் சமுதாய அவலங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

## அடிக் குறிப்புகள்

1. வைரமுத்து, தண்ணீர்த் தேசம், ப.251-252
2. வைரமுத்து, எல்லா நதியிலும் என் ஓடம், ப.17
3. வைரமுத்து, இருபது கட்டளைகள், ப.20
4. இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல ப.115